# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை

# நேரம் வினா எண் 339

# தலைப்பு "வாழ்க்கையின் நான்கு புருஷார்த்தங்கள்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் பக்கம் 151-156லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி வாழ்க்கையில் நான்கு புருஷார்த்தங்கள் என்றால் என்ன.அவற்றை அடைவது எவ்வாறு என்று தாங்கள் எங்களுக்கு விளக்கியருள வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
நான் என்னுடைய மாணவர்களுக்கு எப்போதும் நான்கு F பற்றி சொல்வேன்.
முதல் எஃப் பஃலோத மாஸ்டர் என்பதாகும்.தர்மமே உனது மாஸ்டர்-எஜமான்.எல்லா நேரத்திலும் தர்மத்தை கடைபிடித்திடு.எப்போதும் அறம் சார்ந்த செயல்களில் ஈடுபடு.தர்மத்தை அனுசரிப்பவனை தர்மமே காப்பாற்றும்.மனிதன் மானவ தர்மத்தை கடைபிடிக்க வேண்டுமே தவிர அசுர குணத்துடன் கூடிய செயல்களில் ஈடுபட கூடாது.
இரண்டாவது எஃப் பேஃஸ் தி டெவில் என்பதாகும்.இங்கே பிசாசு என்பது யார்.பணம் அதாவது பொருட்செல்வமே பிசாசு ஆகும்.மனிதர்கள் பணத்தை தேடி தேடி ஓடுகிறார்கள்.அதற்காக தர்மத்தை மீறி அதர்ம வழியில் செல்கிறார்கள்.உலக வாழ்க்கையில் பணமே பிரதானமானது என மனிதர்கள் நினைக்கிறார்கள்.ஆனால் உண்மையில் தர்மமே மனித வாழ்க்கைக்கு பிரதானமானது.தர்மத்தின் வழியில் சென்று பொருளை ஈட்ட வேண்டுமே தவிர அதர்மமான முறையில் செல்வத்தை சேர்த்து கொண்டே போவது பாவமாகும்.
மூன்றாவது எஃப் இறுதி வரை போராடு என்பதாகும்.போராட வேண்டிய எதிரி யார். காமம்.உன் மனதில் உள்ள கடைசி ஆசை மறையும் வரை போராடிக் கொண்டே இரு.
ஒரு முறை முனிசிரேஷ்ட்ர் தஷிணாமூர்த்தி கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார்.அப்போது மண்ணில் முளைத்திருந்த புற்களை கடல் அலைகள் வேகமாக வந்து தாக்கி அவற்றை கடலில் சேர விடாமல் அப்புறபடுத்தி கொண்டே இருந்தன.
அதை கண்டதும் என்ன அநியாயம்.ஒரு சிறு புல் கூட தன்னிடம் சேரக்கூடாது என விரட்டி அடிக்கிறதே இந்த சமுத்திரம் என கோபம்

கொண்டார்.அவர் முன் தோன்றிய சமுத்திர ராஜன் பணிவுடன் அவரை வணங்கி முனி சிரேஷ்ட்டரே.அகந்தையினாலோ வெறுப்பாலோ நான் இவ்வாறு செய்யவில்லை.என் மீது எந்த ஒரு சிறு கறை கூட படிந்து விட கூடாது என்பதற்காகத்தான் அப்படி செய்கிறேன் என்றார்.
இதுவே இறுதி வரை போராடு என்பதாகும்.
நான்காவது எஃப் பிஃனிஷ் தி கேம் என்பதாகும்.வாழ்க்கை என்பதே விளையாட்டு தான்.இந்த விளையாட்டு எப்போது முடியும்.மோஷம் பெறுவதுடன் இது முடிந்து விடும்.எனவே வாழ்க்கையின் இறுதி இலக்கு மோஷமாகும்.
இவ்வாறாக நான்கு புருஷார்த்தங்களில் தர்மம் என்பது பஃலோத மாஸ்டர்,அர்த்தம் என்பது பேஃஸ் தி டெவில்,காமம் என்பது பைஃட் டு த எண்ட்,மோட்சம் என்பது பினிஷ் தி கேம் என்பதாகவும் புரிந்து கொள்ள வேண்டும்.
அர்த்தம் என்பது தர்மத்தின் வழியில் சென்று அடையப்பட வேண்டும்.காமம் என்பது மோஷத்தை அடைவதற்காக மட்டுமே இருக்க வேண்டும்.இவற்றை எல்லாம் தாண்டி வாழ்க்கையின் உண்மை இறுதி இலக்கை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.அதுவே பிரேமை.
அன்பே கடவுள் என்பதால் எப்போதும் அன்பிலேயே வாழ்ந்திருங்கள்
அன்பினால் அடைய முடியாதது எதுவுமே இல்லை.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி உங்களுடைய சரணத்தை அடைய வேண்டும் என்றால் எங்களுக்கு என்ன தகுதி இருக்க வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இந்த விஷயத்தில் உங்களுடைய ஆர்வமே முக்கியமானது.ஆர்வம் மட்டும் இருந்து விட்டால் எதையும் அடைந்து விடலாம்.உங்களுக்கு ஒரு பொருளின் மீதோ ஒரு நபரிடத்திலோ நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் அதனிடத்தில் உங்களுக்கு ஆர்வம உண்டாகி விடும்.என்னிடத்தில் ஆர்வம் இருப்பதால் தான் நீங்கள் ஓடி சென்று முன் வரிசையில் என் பாதத்திற்கு நெருக்கமாக அமருகிறீர்கள் இல்லையா.ஸ்வாமியின் தரிசனத்திற்காக காத்திருக்கும் போது கார் கதவை திறக்கும் சிறு சப்தம் கூட உங்கள் ஆர்வத்தை தூண்டுகிறது இல்லையா.இது எல்லாமே ஸ்வாமி மீது நீங்கள் கொண்டுள்ள ஆர்வத்தினால் தான்.ஆர்வம் இல்லை என்றால் ஸ்வாமி உங்கள் நேரெதிரே வந்து நின்றால் கூட நீங்கள் அதை கவனிக்க மாட்டீர்கள்.

அடுத்த கேள்வி
ஸ்வாமி மாயை என்றால் என்ன என்பது பற்றி எங்களுக்கு விளக்கி சொல்லமுடியுமா ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
மாயை என்று எதுவுமே இல்லை.இருப்பது எல்லாமே பரமாத்மாவான பிரம்மம் மட்டுமே.மாயை என்பது உங்கள் கற்பனையே.உடல் மீது கொண்ட பற்றே மாயைக்கு காரணம்.
ஒரு பெரிய மரத்தின் நிழலை பூமியில் பார்க்கிறோம்.உண்மையில் நிழல் என்பது மரத்திற்கு மேலேயும் இல்லை.கீழேயும் இல்லை.சூரிய கதிர்கள் மரத்தின் மீது படும் போது இலை மற்றும் கிளைகளால் தடுக்கப்பட்டு நிழல் உண்டாகிறது.அது போலவே பிரம்மன் என்ற சூரிய ஒளி மனித வாழ்கையின் உலகபற்று மற்றும் ஆசை என்பவற்றால் தடுக்கப்படும் போது மாயை என்ற நிழல் உண்டாகிறது.
சொல்லப்போனால் மாயை உங்களின் அதீத கற்பனையில் உண்டாவது தான்.

அடுத்த கேள்வி: ஸ்வாமி இந்த மாயையிலிருந்து விடுபடுவது எவ்வாறு

ஸ்வாமியின் பதில்:
மாயை என்று எதுவுமே இல்லை.இல்லாத ஒன்றிலிருந்து ஏன் விடுபட நினைக்க வேண்டும்.அது நீங்களே கற்பனை செய்து கொள்வது தான். இரவு நேரத்தில் கயிறை பார்த்து பாம்பு என கற்பனை செய்து கொண்டு பயந்து விடுகிறீர்கள்.ஆனால் நிதானத்துடன் ஆராயும் போது அது பாம்பல்ல என புரிந்து கொள்ளகிறீர்கள்.அங்கு பாம்பு இருக்கவுமில்லை மறையவுமில்லை.கயிறு மட்டுமே இருந்தது.நீங்கள் தான் அதை தவறாக பாம்பு என்று எண்ணிக் கொண்டீர்கள்.
அதை போல பரமாத்மா அதவாவது பிரம்மம் மட்டுமே இருக்கிறது.மற்றதெல்லாம் ப்ரமை அதாவது கற்பனையே.

அடுத்த கேள்வி ஸ்வாமி மாயையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது.அதன் சக்தி அனைவரையும் பாதிக்கும் என கூறபடுகிறதே.அப்படி இருக்கும் போது மாயை என்று தெரிந்து கொண்டே அந்த குழியில் நாங்கள் மீண்டும் மீண்டும் விழத்தான் செய்கிறோம்.அது ஏன் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
வெளிச்சம் இருக்கும் போது இருட்டு இருப்பதில்லை.அது எங்கே போய்விட்டது.எங்கும் போகவில்லை.அங்கேயே தான் இருக்கிறது.ஆனால் விளக்கை ஏற்றும் போது உண்டாகும் வெளிச்சத்தில் இருட்டு விலகி விடுகிறது.அது போல ஞானம் என்ற வெளிச்சம் இல்லாத போது அஞ்ஞானம் அதாவது மாயை என்ற இருட்டு நிலவுகிறது.ஞானம் ஏற்பட்ட பின்னர் மாயை விலகி விடுகிறது.

நீங்கள் கேட்பது அஞ்ஞானம் என்ற இருட்டு ஏன் திரும்பவும் வருகிறது என்று தானே.
ஒரு பேருந்து பழுதடைந்த சாலையில் ஓடும் போது தூசு கிளம்புகிறது.
பஸ் ஓடி கொண்டே இருக்கும் வரை தூசு பஸ்ஸூக்கு வெளியே தொடர்ந்து வருகிறது.ஆனால் பஸ் நின்று விட்டால் அத்தனை தூசும் பஸ்ஸூக்குள் வந்து சேர்ந்து விடுகிறது.
அது போல் மனித வாழ்க்கையும் பஸ் ஓடுவது போல.ஆன்மீக பயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும்வரை மாயை என்ற தூசு ஒட்டிக் கொள்ளாது.அதை நிறுத்தி விட்டால் மாயை உங்கள் வாழ்க்கையை ஆக்ரமித்துக் கொள்ளும்.ஆன்மீக பயற்சி மட்டுமே உங்களை மாயையிலிருந்து காப்பாற்றும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிரா